DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாண்டித்துரை | Father/Husband Name : செல்வக்குமார் |
| Age : 19 | Village : சங்கராபுரம் |
| Taluk : | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 10, 2025 1:03 PM

(A1, A2 Present)

**முதல் விசாரணை** :-

1. நான் சங்கராபுரத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2018ம் வருடம் தீபாவளி முடிந்து 2வது நாள் நான், கணேஷ் மற்றும் நிதீஸ் ஆகியோர்ள் பள்ளி முடிந்து மாலை சுமார் 05.30 மணியளவில் எங்கள் ஊர் பக்கத்தில் உள்ள 1வது எதிரியின் மருந்து குடோன் அருகேயுள்ள கிரிக்கெட் மைதானத்தில் வைத்து நாங்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தபோது, விளையாட்டு மைதானத்தில் போர்வெல் அடித்த மண் போன்று சில பொருட்கள் கிடந்தது. நான் அதன் அருகே ஓடி, விளையாடிக்கொண்டிருந்தபோது அந்த பொருள் வெடித்தது. வெடித்தவுடன் எனது கண்கள் இருட்டி நான் மயக்கமடைந்துவிட்டேன். அந்த வெடி விபத்தில் எனக்கு இரண்டு கை முழுவதும், நெஞ்சிலும், எனது இடது பக்க தொடையிலிருந்து கால் வரையிலான இடங்களிலும், வலது கால் முட்டியிலிருந்து காலின் கீழ்புறம் வரையிலும் அந்த வெடி சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது. (சாட்சியின் உடல் முழுவதும் தீ காயத்தழும்புகள் காணப்படுகிறது) . என்னுடன் சம்பவத்தின்போது கிரிக்கெட் விளையாடிய நிதீஸ்குமாருக்கு முகத்திலும், பாலகணேஷ்க்கு முகத்திலும், தொடையிலும் காயம் ஏற்பட்டிருந்தது.

3. நான் மயக்கநிலையில் இருந்தேன். பின்னர் ஒரு வாரம் கழித்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது நடந்த சம்பவம் குறித்து எனது அப்பா, அம்மா கூறினார்கள். அந்த மைதானத்திற்குள் வெடி மருந்து எவ்வாறு வந்தது என்ற விவரத்தை யாரும் என்னிடம் கூறவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி :** இந்த வழக்கு விபத்து தொடர்பாக இழப்பீடு எதுவும் பெற்றுக்கொண்டீர்களா?

**பதில் :** இல்லை

**நீதிமன்ற கேள்வி :** ஏன் தற்போது படிக்கவில்லை.

**பதில் :** இந்த வழக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக என்னுடைய இரண்டு கைகளிலும் உள்ள விரல்கள் சரியாக வேலை செய்யவில்லை. ஆகையால், நான் 12 ஆம் வகுப்பு வரை எனக்காக வேறொரு நபரை வைத்து தான் எழுதினேன். என்னுடைய முகத்தில் இந்த வழக்கு வெடி விபத்து காரணமாக தழும்புகள் இருப்பதாலும் நான்

மேற்கொண்டும் படிக்கவில்லை. (சாட்சியின் இரண்டு கைகளிலும் உள்ள விரல்கள் முழுமையாக செயல்படவில்லை. வலது கையில் உள்ள விரல்களை அவரால் மடக்கி நீட்ட முடியவில்லை)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. நான் விளையாட சென்றதாக கூறும் பகுதி ஊருக்கு ஒதுக்குப்புறமான காட்டுப் பகுதி என்றால் சரிதான். அந்த மைதானத்தின் இரண்டு பக்கங்களில் ஓடையும் மற்ற இரண்டு பக்கங்களில் காட்டுப்பகுதியும் இருக்கிறது என்றால் சரிதான். அந்த ஓடைப்பகுதியில் தான் ஊரில் உள்ள மக்கள் குப்பைகளை கொட்டுவார்கள் என்றால் சாலை ஓரமாகத்தான் குப்பைகளை கொட்டுவார்கள், அந்த இடத்தில் இருந்து நாங்கள் விளையாடக்கூடிய இடம் நடந்து சென்றால் ஐந்து நிமிடம் ஆகும். வழக்கு சம்பவம் நடைபெற்ற தினம் தீபாவளிக்கு மறுநாள் என்றால் சரிதான். நாங்கள் விளையாடக்கூடிய பகுதியில் தான் தீபாவளி தினத்தில் எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள் பட்டாசு போடுவார்கள் என்றால் இல்லை, சாலையில் தான் போடுவார்கள். நாங்கள் விளையாடக்கூடிய மைதானத்தில் தான் எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள் வெடி போடுவார்கள் என்றாலும், அதை ஒப்புக்கொண்டால் எங்களுடைய வழக்குக்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதை மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. எங்களுடன் நிறைய நபர்கள் விளையாடுவார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறும் போதும் எங்களுடன் நிறைய நபர்கள் விளையாண்டார்கள் என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் அப்பொழுது விளையாண்டு கொண்டிருந்தோம். எங்களுடன் நிறைய நபர்கள் விளையாண்டார்கள் என்றாலும், அதை ஒப்புக்கொண்டால் எங்களுடைய வழக்கை பாதிக்கும் என்பதால் மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு விபத்தில் என்னுடைய கால் பாதங்களில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தீபாவளி சமயத்தில் எங்களுடைய மைதானத்தில் போடப்பட்ட பட்டாசுகளின் வெடிக்காத பட்டாசுகளை எடுத்து நான் வெடிக்க முயற்சி செய்தபோதுதான் இந்த வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் இல்லை. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. என்னுடைய தாயார் பெயர் ஜெயராணி என்றால் சரிதான். என்னுடைய தாயார் மதுரை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 12456/2019 மனு தாக்கல் செய்தார் என்றாலும் அந்த மனுவில் 02.07.2021 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தமிழ்நாடு மாநில தலைமைச் செயலாளர் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து எனக்கு ரூபாய் 5,00,000/-த்தை இழப்பீடாக கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
Nov 10, 2025 1:20 PM

Judicial Magistrate 2, Sattur